

# யாழ் நாதம்



இதழ் 5 1999




யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கக்
கொழும்புக் கிளையின்
வெளியீடு

இதழ் 5 1999



உள் அட்டை ........

2 கை வண்ணம்

3 தலைவர் வாழ்த்துச் செய்தி

4 மழலைக்கு ஒரு மடல்

7 Egoism – The destructive force in mankind

10 சர்வமும் தெய்வம்

10 புண்ணிய ராத்திரிகள்

11 திருவிளக்கு

12 ஐந்தாம் ஆண்டு அறிக்கை

22 எது இலக்கியம்

26 Agni Hotra – Charm by offering to the fire

29 எதற்காக

குறிப்புகள், Jokes


---

### I hung him up

After hearing that one of the patients in a mental hospital had saved another from a suicide attempt by pulling him out of a bathtub, the director reviewed the rescuer's file and called him into his office.

"Mr. James, your records and your heroic behaviour indicate that you're ready to go home. I'm only sorry that the man you saved later killed himself with a rope around the neck."

"Oh, he didn't kill himself," Mr. James replied. "I hung him up to dry."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை வண்ணம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் 5வது மலராக இந்த இதழ் விரிகிறது. ஆம் எங்கு என்ன நடந்தாலும் நேரம் சீராக ஓடிக்கொண்டே இருக்கிறது. நேரம் பொன்னானது. போன நேரம் திரும்பி வராது. ஆகவே நாம் ஒரு நிமிட நேரத்தையும் வீணாக்காது உபயோகமாகக் கழிக்க வேண்டும் யாழ்நாதம் ஆண்டுக்கு ஒருமுறை மலர்வதும் இந்த உபயோகமான காரியங்களில் ஒன்று என நாம் கருதுகிறோம்.

இந்த மலரை அதிக செலவு இல்லாமல் வெளியீடுவதற்காக இம்முறை ஒரு அச்சகத் தின் உதவியை முற்றாக நாடாது எங்களால் இயலுமானவரை நாங்களே அச்சுக் கோத்துள்ளோம்.

இது எங்கள் சங்க அங்கத்தவர்களின் கை வண்ணத்தை எடுத்துக் காட்டுவதற்கும் எமக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்துள்ளது.

அடுத்து வரும் இதழ்களில் அங்கத்தவர்களின் கை வண்ணம் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டும் என்பது திண்ணம். எமது செலவுகளைக் குறைத்து வரவுகளைக் கூட்டி எங்கள் கல்லூரித் தாய்க்கும் அங்கு கல்வி கற்கும் மாணவிகளுக்கும் சேவை செய்வதே எமது முக்கிய குறிக்கோளாகும்.

வாழ்க யாழ்நாதம். வாழ்க எங்கள் கல்லூரித் தாய்.

திருமதி சிவகாமி அம்பலவாணர்
ஆசிரியர்
61/2, Abdul Gaffoor Mawatha
Colombo 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வாழ்த்துச் செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்." எமக்கெல்லாம் எழுத்தறிவைத் தந்த ஆசிரியர்கள் இறைவனின் இடத்தில் வைத்துப் போற்றத்தக்கவர்கள், இவர்கள் எமக்கு கல்வியறிவு புகட்டிய பாடசாலைகள் ஆலயத்திற்குச் சமமான புனிதம் வாய்ந்தவை. எனவே நாம் கற்ற கல்லூரிக்கு எமது நன்றி கலந்த வணக்கச் செயற்பாடாக மன்றம் அமைத்து எம்மாலான உதவிகளை கல்லூரிக்கு நல்கி வருகிறோம். அதே வேளையில் மன்ற அங்கத்தவர்களின் அறிவு வெளிப்பாட்டுக்குக் களம் அமைக்க யாழ் நாதம் சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறோம். எமது இதழாசிரியர் தொடர்ந்து ஊக்கமுடன் செயற்படுவதால் எவ்வித தடையுமின்றி இதழ் வெளியீடு சிறப்பாகத் தொடர்கிறது. இவ்வாண்டிலும் "யாழ் நாதம்" இதழ் விரிகிறது.

1999 ஒரு சிறப்பு அம்சத்தைக் கொண்டுள்ளது. எமது கல்லூரியின் மாணவிகளை கொழும்புக்கு அழைத்து நல்லைக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தை மேடையேற்றுகிறோம் இவ்வாண்டில் என்று பெருமைப் படுகிறோம். கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜின் ஒத்துழைப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எந்தவொரு பழைய மாணவர் சங்கமும் இதுவரை செய்யாத புது முயற்சி இதுவாகும். வருங்காலத்திலும் இது போன்ற பல ஊக்குவிப்பு நடவடிக்கைகளை எமது சங்கம் மேற்கொள்ளும்.

யாழ்நாதம் சஞ்சிகையில் மன்ற உறுப்பினர்கள் சிலரின் ஆக்கங்கள் இடம்பெறுகின்ற போதிலும், அங்கத்தவர்களின் குடும்பத்தினர் முக்கியமாக இளைஞர்களின் ஆக்கங்களும் இடம்பெறுவது விரும்பத் தக்கது.. கல்லூரியில் கற்று வெளியேறி அறிவுக் களஞ்சியங்களாக விளங்கும் பழைய மாணவிகள் கொழும்புக் கிளையின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து எம் பணிகளுக்கு போதிய ஆதரவு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யாழ்நாதம் மூலமான இலக்கியப்பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

செல்வி சற்சொருபவதி நாதன்
தலைவர்

மழலைக்கு ஒரு மடல்

# மழலைக்கு ஒரு மடல்

உனக்குப் பற்களில்லை—ஆனால்
பொக்கை என்று யாரும்
பழிப்பதில்லை
உன் தலையிலும் முடியில்லை—
ஆனால்
வழுக்கை என்று யாரும்
விழிப்பதில்லை
ஏனென்றால் நீ மழலை!

நீ கூட
நிற்க, நடக்க
தடுமாறுகிறாய்,
தவறி விழுகிறாய்
தளர்ச்சி அல்ல —அது
வளர்ச்சி!

உனக்கு
பொன்னென்றால்
என்னென்று தெரியாது—ஆனால்
உன்னைப் போற்றுவார்
பொன்னே என்று

தெய்வம் உள்ளதா என்று
தெரியாது உனக்கு —ஆனால்
கடவுளும் நீயும் ஒன்றென்று
கடமை செய்வார் என்றென்றும்

சொத்து, சுகம்
பக்தி, பயம்
எதுவும் இருக்காது —என்றாலும்
உன்னிடம் நிம்மதி இருக்கும்,
உண்மையான சிரிப்பிருக்கும்!

நீ
அர்த்தமே இல்லாமல்
சத்தம் போட்டாலும்
ஆயிரம் அர்த்தம் பண்ணி
அனுபவிப்பார்
அதேபோல் —நீ
சோம்பல் முறிப்பது கூட
ஆம்பல் அலர்வது போல்
அற்புதமாய் இருக்கென்பார்

உனக்கு
படிப்பில்லை, பணமில்லை
பதவி, பகட்டு எதுவுமில்லை,
எனினும் —
சுற்றி நிற்கவும் —உன்னைப்
பற்றிப் புகழவும்,
உதவி செய்யவும்
உற்றவர் நிறைய

மழையில் தாம் நனைந்தால் கூட
மனம் பதைப்பார்கள் —தம்
மடியை நீ நனைத்தால்
மனம் பதறமாட்டார்
சினம் கொள்ளமாட்டார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
நெளிவுகளை —மனம்
நெகிழ பார்ப்பது இப்போது

உன்
கழிவுகளைக் கூட
கரிசனையுடன்
கழுவி விடுவது இப்போது

உனது
அசைவு ஒவ்வொன்றையும்
அணுவணுவாக ரசிப்பார்கள் —
இப்போது
அளவில்லா ஆனந்தம்
கொள்வர் —வயது வந்தால்
'ஆட்டம்' என்பார்
அடக்கம் வேணும் என்பார் —
வயது போய்
அசைவுகள் எல்லாம்
அடங்கிப் போனாலோ
முடங்கிப் படுக்க விடுவார்
மூலையிலே!

இப்போது நீ
அரைகுறை ஆடையுடன்
நிற்கலாம்
அம்மணமாகவும் ஆடலாம் —
யாரும்
காமம் கொள்ளப் போவதில்லை
கைகொட்டியும் சிரிப்பதில்லை
—வயது வந்தால்
ஆபாசம் என்பார்கள் —சிலர்
அரைப் பைத்தியம் என்பார்கள்!

இப்போது
குஞ்சே! குறுமணியே! என்று
கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார்கள்
பஞ்சுபோல் மென்மை என்று
நெஞ்சோடு அணைத்திருப்பர் —
வயதானால்
கெஞ்சிக் கேட்டாலும்
பஞ்சிப்படுவார் பணிவிடை செய்ய
கஞ்சப்படுவார் கருணை காட்ட!

இப்போது —
முத்து என்பார்கள் —தம்
சொத்து என்பார்கள்
பொத்திப் பொத்தி
வைத்திருப்பார்கள் —நீ
கத்தி அழுதால் ஓடிவந்து
கட்டி அணைப்பார்கள் —கண்ணீரை
ஒத்தி எடுப்பார்கள் —வயதாகி
செத்துப் போகும் நிலை வந்தால்
சுத்தி நிற்கவும் வரமாட்டார் யாரும்!

இப்போதே
கொட்டாவிகளை
விட்டு விடு
சாப்பிடா விட்டாலும்
ஏப்பங்களை
இப்போதே விட்டு விடு
சும்மா என்றாலும் இப்போதே
தும்மி விடு; துயரம் விடு
சோம்பல் முறி —இவற்றிலுள்ள
சுகங்கள் அறி
இப்போது ரசிப்பார்கள் —பின்னர்
பண்பாடு, நாகரிகம், அடக்கம்
என்று
உன்பாடு கஷ்டமாகிவிடும் —
உன்னை
உன்னிப்பாகக் கவனிப்பார்கள் —
சிலநேரம்
மன்னிப்பும் நீ கேட்க நேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக்
கொஞ்ச வருபவரைக்
கொஞ்சம் கவனி!
அவர்கள் அனைவருமே
தவறு செய்தவர்கள்
சுட்டிக் காட்டினால் –
இல்லையென்று
தட்டிக் கழிப்பவர்கள்
மழலை உன் மனதில்
மாசில்லை
குழந்தை உன் குணத்தில்
தூசில்லை
நீ வளர்ந்தபின் அவர்களைக்
கண்டிக்க முடியாது
தண்டிக்கவும் இயலாது—எனவே
இப்போதே நீ
தப்பேதும் செய்ய முதல்
எதையாவது செய்து விடு –
பிஞ்சுக்காலால்
உதையாவது கொடுத்து விடு

நீ
ஆடையின்றிப் பிறந்தாய்
ஆசையின்றிக் கிடந்தாய்
உனக்கு
ஆடை கட்டி
ஆசை காட்டி
ஆளாக்குவார்கள் பெரியவர்கள்
பழக்க வழக்கங்களை
படித்திடுவாய் அவர்களிடம்
வளர்ந்த பின் —நீ
நல்லவளோ, அல்லாதவளோ
சொல்லு —அவர்களே பொறுப்பு!
உன்னைக்
குற்றம் சாட்ட
மற்றவர்களுக்கு அனுமதி மறுப்பு!

நானும் வளர்ந்தவள் தான்
நாலும் கண்டவள் தான்
நான் விட்ட பிழைகளை
நீ விட்டு விடாதே!
நான் தொட்ட நெருப்பை
நீ தொட்டு விடாதே
முடிந்தால் பிறக்காமல் இருந்துவிடு
பிறந்தால் குழந்தையாக
இருந்துவிடு
இல்லையேல்
வாழ்க்கையில் தேவை நிம்மதி –
அதை
நோக்கிச் செல்லும் வழிக்குச்
சம்மதி
பெற்றவர்க்கு வயதானால் நீயே
கதி
மற்றவர்களின் உணர்ச்சிகளை மதி
அதட்டிப் பேசாதே எவரையும்
வருத்தி
உதட்டில் மாறாத புன்னகையைப்
பொருத்தி
திருந்தாத உள்ளங்களை நீ
திருத்தி
வருந்தாமல் காண் பூரண திருப்தி!

அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Egoism – The destructive force in mankind

If you think " I am nothing" – it is Enlightenment. If you think " I am everything" – it is Egoism. Enlightenment makes you very humble in life and you are rewarded with continuous success. Egoism holds its head straight and gets knocked off. To quote from the legends, In Ramayana – Ravanan, the king of Lanka, In Mahabaratha.- Thuriyothanan, Naragasuran killed by Lord Krishna, Soorapathman who was killed by Lord Murugan, were all symbols of Egoism. Hindu Dharmam warns the egoistic people by revealing to them, the disastrous end that befell all these evil-doers.

In the words of Napoleon Hill - "There must be no over-inflation of the ego in the direction of "ego-mania" by which some men destroy themselves . . . . .striking examples of such men are Adolf Hitler, Benito Musolini and the Kaiser . . . . When men begin to thirst for control over others, or begin to accumulate large sums of money, which they cannot or do not use constructively, they are treading upon dangerous grounds. The human mind is most complex. It suffers from multifold diseases, causes of which are illusions such as gossiping, criticising, fooling, suspicions arguments, condemnation, status, wealth and material possession. The mind is full of darkness caused by violence, lust, envy, anger, pride, prejudice, fear, jealousy, dissatisfaction, unlimited wants, agony, agitation, irritation and cowardice of the mind. Religion is meant to cure these diseases and regain the spiritual health of individuals. As long as there are desires within, the mind helplessly runs in all directions seeking fulfilment of its desires. Consequently it is agitated. An agitated mind misleads mankind to disaster.

Illiterate people easily fall a prey to egoism. They live in a world of darkness full of illusions. You should lead a life of humbleness and simplicity. It is appropriate to mention this legendary story to illustrate the simple truth of being humble. An elephant belonging to a temple, after having a bath and with holy ashes on its forehead – pure and serene - was walking along a narrow bridge. A little

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pig after wading in the mud, wagging its tail, came in the opposite direction. The elephant moved on to a side and gave way for the pig to go. The little pig mockingly told the other pig that was coming along the bridge "See, this huge elephant was so frightened of me that he gave way to me". Another elephant at that bridge asked the temple elephant "Is it true that you were scared of this little pig?" The elephant humbly replied "I am very clean and pure. The mud on the pig should not be thrown on to me. If I trample it, it will be crushed. But I won't do it because my clean foot will become dirty". This explicitly states the simple truth that we should always avoid with magnanimity such egoistic people.

Material pursuits can never give peace, contentment or happiness to mankind. Man is absorbed in the material layers of his personality. All his attention and interest are upon his physical body, mind and intellect. Identifying himself with them, he imagines himself to be a perceiver – actor at the physical level – a feeler at the mental level and a thinker at the intellectual level. He is proud of his physical mental and intellectual achievements. He is lost in the mire of perceptions, emotions and thoughts. Thus he assumes a limited personality. Man must get rid of the false vanity of his physical, mental and intellectual personality – that is the Ego within him and develop the true vanity of infinite being.

This egoism can be compared to a serpent. The poison in the fangs of the snake does not kill the snake. It is harmful only when it is directed outside. Similarly, the mind is harmless as long as it is contained within. The moment, it is directed outside – it assumes the vanity of "I"-ness and "My"-ness. It becomes poisonous. It generates desires and destroys peace and tranquility. When the ego is held firm and the desires are kept under control, man gains mastery over the mind and reaches perfection.

Saint Thirumoolar in his divine book Thirumanthiram had expressed clearly the absurdity of egoism. In these holy stanzas "I" refers to egoism.

* "I"- am dangerous –"I" – am the cause for the Karmic actions and sorrows to all around me.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* "I" – never learnt Divinity – my only qualification is Ignorance – active in illusory activities.
* "I" - never tried to realise my mind but my mind was always full of bad thoughts and imaginations.
* "I" - never worshipped God which would have certainly helped me to wipe off all illusions. Now "I" regret about my stupidity.

"I" in the (mind) must die. You must keep it clear and controlled. Thoughts should not be in darkness – trying to pretend that you are educated, or professionally qualified or possessing wealth or that you know everything, you will never be with the present but be only with the past and future plans, ideas and imaginations. Finally Bhagawan Sathya Sai Baba says that all egoistic ideas should be completely rooted out from the minds. He stresses the fact that dedication means giving up one's wrong identification with the body, senses, mind and intellect and gaining the firm conviction that everything is God only and moulding one's life according to the principle of unity in Divinity.

Let us not forget the truth embedded in Bhagavad Gita "For that which is born, Death is certain – And for the dead, Birth is certain" – hence the life we experience on this earth should be free from Egoism to gain merits in our next birth.

Mrs. Dayanithi Selvanayagam

---

**My father is better than your father**

Three boys are in the school yard bragging of how great their fathers are.

The first one says: "Well, my father runs the fastest. He can fire an arrow, and start to run, I tell you, he gets there before the arrow".

The second one says: "Ha! You think that's fast! My father is a hunter. He can shoot his gun and be there before the bullet".

The third one listens to the other two and shakes his head. He then says: "You two know nothing about fast. My father is a civil servant. He stops working at 4:30 and he is home by 3:45"!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வமும் தெய்வம்

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்

தாயுமானாய் தந்தையுமானாய் பாசமுள்ள சகோதரனுமானாய்
அன்புமிக்க மகளுமானாய் அருமை நாயகனுமானாய்

தாயுமானாய் தந்தையுமானாய் பாசமுள்ள சகோதரனுமானாய்
அன்புமிக்க மகளுமானாய் அருமை நாயகனுமானாய்

கருணா மூர்த்தி திருமாலுமானாய்
கோபமூர்த்தி சிவனுமானாய்
அண்டங்களை இயக்கும் ஆதிபராசக்தியானாய் – நீ
(தாயுமானாய்)

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழிலையும்
கொண்டாய்
அதைச் செய்வதற்கே பிரம்மா விஷ்ணு ருத்திரனானாய்
அவைகளின் சக்திகளாய் கலைமகள் திருமகள் மலைமகள்
ஆனாய் – நீ (தாயுமானாய்)

ஓம் என்ற பிரணவத்தில் பிள்ளையாரானாய்
கலியுக தெய்வம் முருகனானாய் – நீ (தாயுமானாய்)

# புண்ணிய ராத்திரிகள்

சிவனின் ராத்திரி சிவராத்திரி
சக்தியின் ராத்திரி நவராத்திரி (சிவனின்)

முதல் மூன்று நாளும் மலைமகள் ராத்திரி
நடு மூன்று நாளும் அலைமகள் ராத்திரி
இறுதி மூன்று நாளும் கலைமகள் ராத்திரி (சிவனின்)

பெருமாளின் ராத்திரி ஏகாதசி
ஆனைமுகன் ராத்திரி ஆவணி சதுர்த்தி
கந்தனின் ராத்திரி கந்தசஷ்டி (சிவனின்)

சிவராத்திரி நவராத்திரி ஏகாதசி ஆவணி சதுர்த்தி கந்தசஷ்டி
சிவராத்திரி நவராத்திரி ஏகாதசி ஆவணி சதுர்த்தி கந்தசஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு

குத்துவிளக்கே எங்கள் குலவிளக்கே
பொன்னொளி தரும் பொன்விளக்கே
திருமகள் உறையும் திருவிளக்கே (குத்துவிளக்கே)

ஆசார சீலராக செவ்வாய் வெள்ளியில்
ஐந்து திரி ஏற்றி சிவத்த பட்டு சாற்றி
மலராலும் குங்குமத்தாலும் அர்ச்சித்து
திருவிளக்குப் பாடல் பாடி தீபங் காட்டி
பழம் பாக்கு வெற்றிலை நைவேத்தியம் வைத்து
வழிபடுவோருக்கு நீ அருள்பாலிக்கின்றாய் (குத்துவிளக்கே)

சுமங்கலியானால் தாலி பாக்கியமும்
கன்னிப் பெண்களானால் நல்ல கணவர்களையும்
ஆண்களானால் நீண்ட ஆயுளும் செல்வமும்
நீ கொடுக்கின்றாய் அம்மா திருவிளக்கே (குத்துவிளக்கே)

விமலா மணிவாசகன்.

---

## குத்து விளக்கிலுள்ள ஐந்து முகங்கள் எவற்றை குறிக்கின்றன

அவை குடும்பப் பெண்களுக்கு இருக்க வேண்டிய

1. அன்பு
2. நிதானம்
3. சமயோசிதம்
4. சகிப்புத்தன்மை
5. மன உறுதி

என்ற ஐந்தையும் குறிக்கின்றன.

இது இந்து மதத்தின் உயர்ந்த தத்துவங்களில் ஒன்று.

(இந்து சமயக் களஞ்சியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம்
# கொழும்புக்கிளை
## ஐந்தாம் ஆண்டு (1998) அறிக்கை

24.01.1998 தொடக்கம் 06.02.1999 வரையும்

சங்கத்தின் நான்காவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் இருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் செல்வி சற்சொருபவதி நாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 21 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

எங்கள் கல்லூரி இளைப்பாறிய அதிபர் திருமதி ஆறுமுகம் அவர்கள் காலமாகியதையிட்டு அவருடைய ஆத்ம சாந்திக்காக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினோம்.

நடப்பு ஆண்டின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் – திருமதி புஷ்பம் சுப்பிரமணியம்

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

தலைவி – திருமதி தயாநிதி செல்வநாயகம்

உபதலைவர்கள் – செல்வி சற்சொருபவதி நாதன்
– திருமதி இந்திராணி சோமசுந்தரம்
– திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்

பொதுச்செயலாளர் – திருமதி சிவகாமி அம்பலவாணர்

உதவிச்செயலாளர்கள் – திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்
– திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன்

பொருளாளர் – திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

உதவிப்பொருளாளர் – திருமதி பொன்மலர் கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக்குழுவினர் – திருமதி நாகராஜேஸ்வரி அலெக்ஸாண்டர்

- திருமதி ருக்மணி அரசரத்தினம்
- திருமதி ஞானலக்ஷ்மி பாலசிங்கம்
- திருமதி தனவதி கனகரட்ணம்
- செல்வி சீதா செல்லையா
- திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
- திருமதி நாகேஸ்வரி கனகசபை
- திருமதி விமலா மணிவாசகன்
- திருமதி யோகேஸ்வரி பரமேஸ்வரன்
- திருமதி சீதா பொன்னுத்துரை
- திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
- திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
- திருமதி புவனேஸ்வரி சத்தியநாதன்
- திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்
- திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன்
- திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்
- திருமதி பத்மா சோமகாந்தன்
- திருமதி நாகபூஷணி சுப்பிரமணியம்
- செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
- திருமதி கௌரி தேவசேனாதிபதி
- திருமதி கற்பராதேவி தில்லைநாதன்
- திருமதி குகஜோதி விஜயநாயகம்
- திருமதி திலகவதி வீரசிங்கம்
- திருமதி திலகா விஜயரத்தினம்
- திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்

கணக்குப் பரிசோதகர் – ரீ அலெக்ஸாண்டர் அண்ட் கம்பனி

எங்கள் சங்க அமைப்பு விதிகளின்படி செயற்குழு அங்கத்தவர் ஒருவர் தொடர்ந்து 3 வருடங்களுக்குமேல் ஒரு பதவியை விசேஷகாரணங்கள் இல்லாமல் வகிக்கப்படாது என்ற காரணத்தால் தான் தலைவியாக இருக்க விரும்பவில்லை என செல்வி சற்சொருபவதி நாதன் தெரிவித்தார். இதுவரைகாலமும் அவர் தலைவியாக இருந்து சங்கத்தை திறம்பட வழிநடத்திச் சென்றதற்கு திருமதி சிவகாமி அம்பலவாணர் அவருக்கு சங்கத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்தார். புதிய தலைவி திருமதி தயாநிதி செல்வநாயகத்திற்கு செல்வி சற்சொருபவதி நாதன் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூட்டத்தில் எங்கள் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியைகளை கௌரவ அங்கத்தவர்களாக சேர்ப்பதாகத் தீர்மானம் எடுத்தோம். இத்தீர்மானத்தின் தொடர்ச்சியாக கௌரவ ஆசிரிய அங்கத்தவர்களை வரவேற்கும் முகமாக 1998ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 21ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி திருமதி தயாநிதி செல்வநாயகம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தினோம். ஆசிரியைகள் திருமதி எஸ் பாலசுப்பிரமணியம், திருமதி எல் பாலசிங்கம், திருமதி ஏ. நாகரட்ணம், திருமதி பி. சுப்பிரமணியம் உட்பட 20 அங்கத்தவர்கள் வருகை தந்திருந்தனர். தலைவி வந்திருந்த ஆசிரியைகளுக்கு நன்றி கூறி வரவேற்றார். அங்கத்தவர்கள் வந்திருந்த ஆசிரியைகளுடன் உரையாடி மகிழ்ந்தனர்.

எங்கள் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப்பிள்ளையார் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று குருக்கள் கூறுவதாக கல்லூரி அதிபர் 22.01.1998 திகதி இட்ட கடிதம் மூலம் அறிவித்திருந்தார். அதற்கு ரூபா 50,000/- வரை செலவாகும் எனவும் எங்கள் கிளையின் அங்கத்தவர்கள் உதவி செய்வார்களோ? எனவும் கேட்டிருந்தார். அதை நாங்கள் அங்கத்தவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தோம். 21—2—1998 நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கும்பாபிஷேகத்திற்கென பல அங்கத்தவர்கள் மனமுவந்து அன்பளிப்புச் செய்தனர். மொத்தம் ரூபா 11.800/- சேறியது. இப்பணத்தை எங்கள் சங்க உபதலைவி திருமதி இந்திராணி சோமசுந்தரம் தனக்குத் தெரிந்த ஒருவர் மூலம் அனுப்பி வைத்தார். திருமதி இந்திராணி சோமசுந்தரத்திற்கு எமது பாராட்டுகளை தெரிவிக்கிறோம்.

கல்லூரி அதிபர் 22.01.1998 திகதி இடப்பட்ட கடிதம் மூலம் நாங்கள் அனுப்பிய யாழ்நாதம் இதழ் 3 பிரதிகள் ஐந்தும் கிடைத்ததாக அறிவித்தார். அதில் பிருந்தா தவக்குமாரனின் ஆக்கம் சிறப்பாக அமைந்திருந்ததாகவும் தனது பாராட்டுகளைத் தெரிவிப்பதாகவும் எழுதியிருந்தார்.

பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை கொமேஷல் பேப்பரில் நாங்கள் எங்கள் பணத்தை வைப்பிடு செய்தால் அதிக வட்டி வரும் எனக் கூறினார். ஆனால் அதில் வைப்பீடு செய்வதற்கு குறைந்தது ரூபா 150,000/- தேவை எனவும் கூறினார். அத்துடன் எங்கள் கல்லூரி அதிபர் கல்லூரிக்கு ஒலிபெருக்கிச் சாதனம் தேவையாக இருப்பதாக சென்ற ஆண்டு எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே கல்லூரிக்கு ஒலிபெருக்கிச்சாதனம் கொள்வனவு செய்வதற்கும் ஒரு கணிசமான தொகையை கொமேஷல் பேப்பரில் வைப்பீடு செய்வதற்கும் நிதி திரட்டுவதற்காக ஒரு நாடகம் திருமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரை தட்டிய மீன்கள் நாடகத்தில் பங்கு பற்றியோர் – இடமிருந்து வலம் – செல்வன் பாலஶ்ரீதரன் வாமலோஷணன், செல்வன் பாலஶ்ரீகரன் தவமயூரன், செல்வி கோபிதா சுவாமிநாதன், செல்வி வீனோபா வீவேகானந்தநாதன், செல்வி சத்தியசெல்வி முத்துக்குமாரு, செல்வி சுதர்ஷிணி பொன்னையா, திரு முருகேசு ரவீந்திரன், திருமதி வீஜயாள் பீற்றர், செல்வி ஏ சீ எம் ஜெயசோதி, திரு அருணா செல்லத்துரை, திரு ராஜபுத்திரன் யோகராஜா, திரு பெல்ப்ஸ் ஜெகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடகத்தின் பிரதம விருந்தினராக வருகை தந்த திரு, திருமதி கயிலாசபிள்ளை சிறப்பு விருந்தினராக வந்திருந்த அருள் திரு மரிய சேவியர் அடிகளுடன் நிற்கின்றார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலா மணிவாசகனின் ஆலோசனைப்படி ஒழுங்கு செய்ய உத்தேசித்தோம்.

திரு தில்லைநடராசா அவர்கள் நாடகக் குழுவுடன் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளைத் தொடக்கி வைத்தார். அவருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

செல்வி சற்சொருபவதி நாதன் பிரபல வானொலி நடிகர்களை பிரத்தியேகமாகச் சந்தித்து ஒரு நாடகம் எழுதுவித்து மேடையேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பல வேலைகளுக்கு மத்தியிலும் இதை வெற்றிகரமாக ஒப்பேற்றிய செல்வி சற்சொருபவதி நாதனுக்கு நாங்கள் எங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம்.

நாடக ஒழுங்குகளைக் கவனிக்கும் உப குழு சந்தித்து செயல்படுவதற்கு திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் கொழும்பு 6, பொஸ்வெல் பிளேஸ் 46/1, இலக்கத்தில் உள்ள தனது இல்லத்தைத் தந்து உதவினார். திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்திற்கு எமது பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம்.

என்றும்போல திருமதி அபிராமி கயிலாசபிள்ளை உப குழுவின் ஆணிவேராகத் திகழ்ந்தார். அவரின் விடாமுயற்சியே நாடகத்தின் வெற்றிக்கு வழிகோலியது என்றால் மிகையாகாது. அத்துடன் அவரின் கணவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும் இன்னும் பல தமிழ் இந்து அமைப்புகளுக்கும் தலைவரான திரு கயிலாசபிள்ளை நாடகத்திற்கான பொருட்செலவுகள் முழுவதையும் தந்து உதவினார். அவருக்கு எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒழுங்கு செய்யப்பட்ட சமூக நாடகத்தின் பெயர் "கரைதட்டிய மீன்கள்". இது ஒரு முழு நீள நகைச்சுவை நாடகம் தற்போதைய சூழ்நிலையையும் இந்தச் சூழ்நிலையில் எமது சமூகத்தினர் எந்தெந்த முறைகளில் சில காரியங்களைச் செய்கின்றார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. இந்த நாடகம் திரு அருணா செல்லத்துரையின் இயக்கத்தில் அரங்கிற்கு வந்தது. நாடகத்தில் பிரபல வானொலி கலைஞர்கள் பங்கு பற்றினார்கள். பங்குபற்றியோர்:-

திரு அருணா செல்லத்துரை
திரு ராஜபுத்திரன் யோகராஜா
செல்வி ஏ சீ எம் ஜெயசோதி
திருமதி விஜயாள் பீற்றர்
திரு முருகேசு ரவீந்திரன்
திரு பெல்ப்ஸ் ஜெகநாதன்
செல்வி சுதர்ஷிணி பொன்னையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சத்தியசெல்வி முத்துக்குமாரு
செல்வி வினோடா விவேகானந்தநாதன்
செல்வி கோபிதா சுவாமிநாதன்
செல்வன் பாலஸ்ரீதரன் தவமயூரன்
செல்வன் பாலஸ்ரீதரன் வாமலோஷணன்

நாடகத்திற்கு பின்வரும் டிக்கற்கள் அச்சிட்டோம்

| வரிகள் | எண்ணிக்கை | பெறுமானம் (ரூபா) | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2 | 50 | Invitation Cards 2,000 & above | 100,000 |
| 4 | 100 x 1.2* | 500 | 50,000 |
| 10 | 250 x 1.2* | 200 | 50,000 |
| 16 | 400 x 1.2* | 100 | 40,000 |
| 8 | 200 x 1.2* | 50 | 10,000 |

*20 வீதம் கழிவுக்கு இடம் வைத்து ரிக்கட் எண்ணிக்கையை கணித்தோம்

நாடகத்திற்கு பெரும்பான்மையான ரிக்கட் விற்பதற்கு உதவியதோடுமட்டுமல்லாது என்றும் எங்களுடைய தேவைகட்கு மனமுவந்து உதவிபுரியும் கலாநிதி வி அம்பலவாணர் அவர்கட்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்

நிதி திரட்டுவதற்காக நடத்த உத்தேசித்துள்ள நாடக ஒழுங்குகள் பற்றி கலந்துரையாடுவதற்காக ஒரு பொதுக்கூட்டம் 1998ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி கொழும்பு 4, லெறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் வைத்தோம் இக்கூட்டத்திற்கு 19 அங்கத்தவர்கள் வந்திருந்தனர்.

நாடகத்தை 30.05.1998 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு 4, 75ஆம் இலக்க இல்லத்தில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடத்தினோம் நாடகத்தை நடத்துவதற்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் சரஸ்வதி மண்டபத்தை தந்து உதவியதோடு மட்டுமல்லாது எங்கள் சங்க கூட்டங்களை நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்து உதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்

இந்த நாடகத்திற்கு திரு திருமதி கயிலாசபிள்ளை அவர்கள் பிரதம அதிதிகளாக வருகை தந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு விருந்தினராக அருள் திரு மரிய சேவியர் அடிகள், திரு. திருமதி தில்லை நடராசா, திரு திருஞான சுந்தரம், ஜனாப் தமிழ்மணி மானா மக்கீன், திரு திருமதி ராஜதுரை, எங்களுக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அறிவு புகட்டி இப்போது நாம் இருக்கும் நிலைக்கு வரத் தளமிட்ட ஆசிரியைகள் ஆகியோர் வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்

எல்லோரும் புகழும் வண்ணம் மேடை அமைப்புகளை திறம்பட ஒழுங்கு செய்த திரு கதிர்காமத்தம்பிக்கும் நாம் நன்றிகளைத் தெரிவிக்கிறோம்

மேலும் நாடகத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவிய அங்கத்தவர்கள் எல்லோருக்கும் குறிப்பாக திருமதி மல்லிகாதேவி சரவணபவான், திருமதி பொன்மலர் கந்தசாமி, திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம், திருமதி விமலா மணிவாசகன், செல்வி சிவமலர் சுப்பிரமணியம், ஆகியோருக்கு எமது பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம் நாடகத்திற்கு எங்கள் சங்க அங்கத்தவர்கள் பலர் உணவு. சிற்றுண்டி பொருட்கள் முதலியன இலவசமாக தந்து உதவினார்கள். அவர்கள் ஆர்வம் என்றும் நிலைக்கட்டும்.

நாடகத்தின் சிற்பி திரு அருணா செல்லத்துரை எங்கள் சங்கம் தங்கள் நாடகம் சிறப்பாக அமைய மிகுந்த ஒத்தாசையாக இருந்ததாகவும் அதற்காக கலைஞர்கள் நன்றி கூற விரும்புவதாகவும் தெரிவித்தார். கலைஞர்கள் எங்கள் சங்க உறுப்பினர்கள் நால்வரை 9–6–1998 காலை 9.30 மணிக்கு அழைத்து விருந்துபசாரம் அளித்தார்கள்.

நாடகத்தில் சேர்ந்த ரூபா 217,000/- த்தையும் முதலில் கொமேஷல் பேப்பரில் வைப்பிடு செய்து பின்பு அதிலிருந்து வரும் வட்டியில் ஒலிபெருக்கிச் சாதனம் வாங்கி அனுப்பத் தீர்மானம் எடுத்தோம்

திருமதி றிலங்கி செல்வராஜா (ரூபாவாகினி) யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் எங்கள் கல்லூரி மாணவிகள் நன்றாக நடனம் ஆடியதாகவும் அதை ரூபவாகினியில் காண்பிப்பதற்காக தான் பதிவு செய்து கொண்டு வந்ததாகவும் எங்கள் உபதலைவி செல்வி சற்சொருபவதி நாதனிடம் கூறினார். எனவே நாம் அம்மாணவிகளைக் கொழும்பிற்கு அழைத்து ஒரு நிகழ்ச்சி ஒழுங்கு செய்வோம் என உத்தேசித்துள்ளோம்

எங்கள் கல்லூரியை தேசிய பாடசாலையாக்க முயற்சிக்கும்படி அதிபர் 05.03.1998 திகதி இடப்பட்ட கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான ஆவணங்கள் சேகரிப்பதிலும் உரியவர்களுக்கு விண்ணப்பிப்பதிலும் நாம் கருத்தாக இருக்கிறோம்.

அதிபர் 21.04.1998 திகதி இடப்பட்ட கடிதத்தில் கும்பாபிஷேகத்திற்கு அன்பளிப்புச் செய்தவர்களின் பெயர் நட்சத்திரம் அடங்கிய பிரதியும் புத்தகங்களும் (விஞ்ஞான முரசு இதழ் 8 பிரதிகள் ௨, The Cult of Siva with special reference to the dances of Siva by Tambyah Nadaraja, யாழ்நாதம் இதழ் 3 பிரதிகள் ௨) கிடைத்ததாக அறிவித்திருந்தார். அத்துடன் கும்பாபிஷேக நோட்டீஸ் ஒன்றும் அனுப்பியிருந்தார்.

நாங்கள் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரின் கோயில் கும்பாபிஷேகத்திற்கு அன்பளிப்பு வழங்கியதற்காக கல்லூரி அதிபரும் கும்பாபிஷேகக் குழுத் தலைவர் திருமதி த. சிவலிங்கமும் 14.05.1998 திகதி இடப்பட்ட கடிதம் மூலம் நன்றி தெரிவித்து விபூதி பிரசாதம் அனுப்பியிருந்தார்கள். 6–6–1998 கூட்டத்திற்கு வந்திருந்த அங்கத்தவர்கள் எல்லோரும் விபூதி பிரசாதம் பெற்றுக்கொண்டனர். ஏனைய அங்கத்தவர்களுக்கு ஆண்டுப் பொதுக்கூட்டத்தின்போது கொடுப்போம் எனத் தீர்மானித்தோம்.

இவ்வருடம் நாம் ஒரு கணனி கல்லூரிக்கு அனுப்ப உத்தேசித்தோம். ரூபா110,095/- பெறுமதியான கணனி ஒன்று எமக்கு அன்பளிப்பாகக் கிடைத்தது. இக்கணனி பின்வரும் பாகங்களைக் கொண்டது :

| ITEM | Amount in Rs. |
|---|---|
| SYSTEM IBMPC300GL 6282-68-A (Invoice 105181 of 3.6.98) | 50,000.00 |
| MONITOR IBM 14" G42 (Invoice105181 of 3.6.98) | 20,000.00 |
| PRINTER EPSON LX 300 (Invoice 105181 of 3.6.98) | 10,000.00 |
| CD ROM DRIVE CREATIVE 32X INTER W/REMOTE (Inv.105308 of 19.6.98) | 5,500.00 |
| SPEAKERS ZOLTRIX 120WPMPD BUILDIN AMPLI (Inv.105309 of 19.6.98) | 1,800.00 |
| ZOLTRIX SOUND CARD (Invoice 105308 of 19.6.98) | 1,300.00 |
| 250VA REMINGTON UPS (Invoice 105308 of 19.6.98) | 8,400.00 |
| Total | 97,000.00 |
| GST 12.5% | 12,125.00 |
| BTT 1% | 970.00 |
| GRAND TOTAL | 110,095.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்புத் தமிழ்ச் சங்கம் சிறந்த பெண்மணி என்ற கௌரவத்தை செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு மார்ச் 1999 இல் வழங்கியது. தேசமான்ய சஹாப்டீன் இடம் இருந்து சற்சொரூபவதி விருது பெறுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடகத்தின் ஹாஸ்ய கட்டம் — இடமிருந்து வலம் — நாடகத்தை எழுதிய திரு அருணா செல்லத்துரை, நாடகத்தின் சிறப்புக் கதாபாத்திரங்கள் செல்வி ஏ சீ எம் ஜெயசோதி, திரு ராஜபுத்திரன் யோகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கணனியை தந்துதவிய திரு. வி. கயிலாசபிள்ளை, திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி விமலா மணிவாசகன், திருமதி சிவகாமி அம்பலவாணர் ஆகியோருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்
தற்பொழுது இக்கணனியைக் கல்லூரிக்கு அனுப்ப ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கிறோம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக்கிளை ஆரம்பமாகி 5 ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டும் கல்லூரி ஸ்தாபகதினத்தை முன்னிட்டும் 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை ஒரு ஒன்று கூடல் நிகழ்ச்சியை பேருவல ஸீ ஸான்ட் ஹோட்டலில் நடத்தினோம் இந்த நிகழ்ச்சியில் எங்கள் சங்க அங்கத்தவர்களும் அவர்களின் நண்பர்கள் உறவினர்கள் சிலரும் கலந்து கொண்டனர். மொத்தமாக 20 அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியை திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஒழுங்கு செய்தார். அவருக்கு எங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம்

யாழ் நாதம் இதழ் 4 லை சிறிய மலராக குறைந்த செலவில் அச்சிட்டு 26-12-98 நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின்போது வெளியிட்டோம் முதல் பிரதியை எங்கள் சங்கத் தலைவி திருமதி தயாநிதி செல்வநாயகம் எங்கள் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவிற்குக் கையளித்து வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார். கல்லூரி அதிபர் வருகை தந்து முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டமை சங்க அங்கத்தவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. மேலும் கல்லூரி பற்றிய விபரங்களை நாங்கள் அதிபர் மூலம் அறிந்து கொண்டோம்.

எங்கள் கல்லூரி அதிபர் கல்வி அமைச்சினால் புதுடில்லியில் ஒழுங்கு செய்யப்பட்ட 3 வார பயிற்சிக்கு செல்வதற்காக கொழும்பில் நின்ற சமயம் நாம் அவரை இந்தக் கூட்டத்திற்கு அழைத்திருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. சங்கத் தலைவி திருமதி தயாநிதி செல்வநாயகம் எங்கள் அழைப்பை ஏற்று கூட்டத்திற்கு வருகை தந்து யாழ்நாதம் இதழ் 4 முதற்பிரதியைப் பெற்று ஒரு கணிசமான தொகையை அன்பளிப்பாக தந்தமைக்கு கல்லூரி அதிபருக்கு நன்றி தெரிவித்தார்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை (Audit) செய்து தந்த ரீ அலெக்ஸாண்டர் அன்ட் கம்பனி. ரீ 3/7, Anderson Flats, கொழும்பு 5, இற்கும். இதை ஒழுங்கு செய்த திருமதி நாகராஜேஸ்வரி அலெக்ஸாண்டருக்கும் எங்கள் சங்கத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒலிபெருக்கிச் சாதனங்கள் இரண்டு (2 Nos. Ahuja Amplifier sets) 28.01.1999 அன்று Robert Agencies Ltd. 88, Reclamation Road, Colombo 11 இல் இருந்து ரூபா 35,690/75 இற்கு கொள்வனவு செய்தோம். கொள்வனவு செய்த ஒலிபெருக்கிச் சாதனங்களின் விபரம் பின்வருமாறு :

| Quantity Nos. | Description | Rate Rs.Cts. | Price (Rs. Cts) |
|---|---|---|---|
| 2 | Amplifiers A AMP 14 (Model SSB45M) | 8,147.00 | 16,294.00 |
| 4 | Horns A HOR 2 (WFB 18") | 1,675.00 | 6,700.00 |
| 4 | Driver Units A Du 09 (AU 40) | 1,701.00 | 6,804.00 |
| 2 | Microphones A Mic 23 (AUD 99XLR) | 1,985.00 | 3,970.00 |
| 1 | Mike Floor Stand (AGN) | 1,672.00 | 1,672.00 |
| 1 | Table Mike Stand A STA5 (DGT) | 992.00 | 992.00 |
| | T O T A L | | 36,432.00 |
| Less | Discount 5% approximately | | 1,821.25 |
| | T O T A L after deducting the discount | | 34,610.75 |
| | | | |
| 1 | B Plug 20 | | 29.00 |
| 1 | B Plug 21 | | 66.00 |
| 1 | Wire 22 (Role of 100 meters) | | 985.00 |
| | T O T A L with optional accessories | | 35,690.75 |

இந்த ஒலிபெருக்கிச் சாதனங்கள் இரண்டையும் எமக்கு முன்பு அன்பளிப்பாகக் கிடைத்த கணனியையும் எங்கள் கல்லூரிக்கு அனுப்புவதற்கு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் உதவ முன்வந்துள்ளார். அவருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

சங்கத்தின் 4ஆவது நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 14.03.1998 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 13 |
| 6.06.1998 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 12 |
| 19.08.1998 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 14 |
| 16.10.1998 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 13 |
| 26.12.98 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரைகாலமும் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவிக்கும், அவர் வெளிநாடு சென்றிருந்த சமயம் சங்கத்தை திறம்பட நடத்திய உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கும். எத்துறையிலும்

அயராது உழைக்கும் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும், நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாட்டு நிலைமை காரணமாகவும், பொருளாதாரம் காரணமாகவும் எங்கள் சங்க நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் அங்கத்தவர் தொகை இன்னும் குறைவாகவே இருக்கிறது. எனவே இன்று பதவியேற்க இருக்கும் புதிய நிர்வாகக்குழுவில் பல இளம் அங்கத்தவர்கள் சேர்ந்து ஆர்வமுடன் பணிபுரிவார்கள் என நம்புகிறேன். புதிய நிர்வாகக்குழு திறம்பட செயல்புரிய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

திருமதி சிவகாமி அம்பலவாணர்
கௌரவ செயலாளர்
06.02.1999

## நெருப்பில் மறைந்து விளங்கும் சிவபெருமானின் அம்சங்கள்

| | | |
|---|---|---|
| நெருப்புச் சுடர் | – | சிவபெருமான் |
| நெருப்பில் உள்ள சூடு | – | அம்பிகை (பராசக்தி) |
| நெருப்பில் உள்ள செம்மை நிறம் | – | விநாயகர் |
| நெருப்பில் உள்ள ஒளி | – | முருகேசன் |

## செய்யுள்

சுடரோ சிவபெருமான் சூடு பராசக்தி
திடமார் கணநாதன் செம்மை – படரொளியோ
கந்தவேலாகும் கருதுங்கால் சற்றேதும்
வந்ததோ பேத வழக்கு.

– அருளாட்சி –
வடலூர் சத்திய ஞான சபைத் திருப்பணி நிறைவு விழா மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது இலக்கியம்?

இலக்கியம் என்பது, இலக்கு உடையது, நோக்கம் உடையது என்பர் சிலர். இலக்கியம் என்பது காலக்கண்ணாடி என்பர் வேறு சிலர். வாழ்க்கை வழிகாட்டி என்றும், வரலாற்றுப் பெட்டகம் என்றும் பலரும் பலவிதமான விளக்கங்களைக் கூறிச் சென்றுள்ளனர்.

இலக்கியம் என்பது பயன்பாடு உடையதாக இருப்பதோடு அதில் படிப்பவரை ஈர்க்கும் ஜனரஞ்சகத் தன்மையும் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இலக்கியம் என்ன சொல்கிறது என்பது எப்படி முக்கியமோ, அதைவிட முக்கியம் அதை எப்படிச் சொல்கிறது என்பதாகும்.

ஏட்டளவில் முடங்கிக் கிடக்கும் இலக்கியம் நாட்டிலே எழுந்து நடமாட வேண்டும். படித்தவன் கைகளினால் விளையும் இலக்கியம் பாமரனின் நெஞ்சிலே குடியேற வேண்டும். கேட்போர்க்கு, படிப்பவர்களுக்கு சுவை ஏற்படும் விதத்திலே சொல்லப்படுபவை எல்லாம் சிறந்த இலக்கியங்களே. இருவர் சாதாரணமாக உரையாடிக் கொள்ளும் பொழுதுகூட இலக்கியம் பிறக்கிறது. அதில் எளிமை இருக்கிறது. இனிமை இருக்கிறது.

ஒரு தடவை ஒரு சொற்பொழிவாளர் அன்பர் ஒருவரின் வீட்டில் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார், அப்பொழுது திடீரென்று 'பச்சை மா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்' என்று பாட ஆரம்பித்தார். விருந்தளித்தவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இப்பாடலின் பொருள் திருமால் பச்சை நிறங்கொண்ட பெரிய மலையைப் போன்ற திருமேனி கொண்டவன் பச்சை மாமலைபோல் மேனி பவளம் போல் வாயை உடையவன். தாமரை போன்று சிறந்த கண்களை உடையவன் கமலச் செங்கண்–இது என்ன, இவர் கையில் இட்டலியை வைத்துக் கொண்டு இப்படி வர்ணிக்கிறாரே என்று விருந்து கொடுத்தவர் யோசித்தார். விருந்தாளி வியாக்கியானம் சொன்னார். இந்த இட்டலி வேகாத இட்டலி–பச்சை மா, அந்த இட்டலியில் கடிபட்ட கல், மலைபோல் மேனி அதனைக் கடித்ததால் பல் தாக்கப்பட்டு இரத்தம் வடிவதால் பவளவாய், இந்த வேதனையால் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவந்து நீர் வடிவதால் கமலச் செங்கண்– பாருங்கள் வேதனையிலும் இலக்கியம் பிறப்பதை, இதனை நாம் சுவைக்கவே செய்கிறோம். இது நடைமுறை இலக்கியம்.

இனித் தாலாட்டுப் பாடல் ஒன்றைப் பார்ப்போம். ஒரு தாய் தன் குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டிக் கொண்டு பாடுகிறாள். அவளுக்கு அது ஒரே குழந்தை, பெண் குழந்தை. இன்னொரு ஆண் குழந்தை பெற அவளுக்கு விருப்பம், இதைக் கணவனிடம் தெரிவிக்க வேண்டும். இயல்பாக எழும் நாணம் அவளைத் தடுக்கிறது. அப்பொழுது தாலாட்டுப் பாடல் அவளுக்குக் கைகொடுக்கிறது.

"ஆராரோ ஆரிவரோ ஆரடித்தார்
ஏனழுதாய் அடித்தாரைச் சொல்லி அழு"

இப்படித் தொடங்கி

"அடித்தாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணுகிறேன்
ஆரும் அடிக்கவில்லை ஐவிரல்கள் தீண்டவில்லை
அவளா அழுகின்றாள் அடுத்த துணை வேணுமின்னு
தானா அழுகின்றாள் தம்பி துணை வேணுமின்னு"

குழந்தை தனக்கு ஒரு தம்பி, துணையாக வேண்டும் என்று அழுகிறதாம். என்ன அழகு, என்ன நயம்?

சில புதுக் கவிதைகள் வசனம்போல் இருந்தாலும், அதிலுள்ள கருத்து ஆழமாக இருக்கும். குறைந்த வரிகளில் நிறைந்த கருத்து காணப்படும். ஏழை, பணக்காரன் என்ற பேதமில்லாத சமதர்ம சமுதாயம் ஒன்றை அமைக்கப் போவதாகச் சொல்பவர்களைப் பார்த்து ஒரு கவிஞர் கேட்கிறார்.

'மேட்டை வெட்டாமல், பள்ளம் நிரப்புவோரே மண்ணுக்கு
எங்கே போவீர்'–

கவிதை இவ்வளவுதான். ஆனால் அதன் பொருள்? ஆமாம் பொழிப்புரை, பதவுரை, விளக்கவுரை என்று பலவுரைகள், இதற்குத் தரமுடியுமே. இதுதான் இலக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி ஒரு மரபுக் கவிதை, ஒரு கவிஞன் ஒரு தடவை இன்னொரு கவிஞனைப் பாராட்டினான் எப்படி? "தடுமாறும் போதையிலும் கவிபாடும் மேதையிவன்" அற்புதமான ஒரடி இலக்கியம் பல்லாயிரக் கணக்கான மக்களாலும் தூக்க முடியாத வில்லை இராமன் எப்படி ஒடித்தான்? கம்பனும் இதற்கான காரணத்தை நேரடியாக விளக்கவில்லை கவிஞர் ஒருவர் இதற்குக் காரணம் கூறியுள்ளார்.

அரண்மனை மேல் மாடத்தில் நின்ற சீதை கீழே நின்று கொண்டிருந்த இராமனை நோக்கினாள். அவனும் நோக்கினான். இது போதாதா? சீதை புருவத்தை வளைத்து நோக்கினாளாம் கவிஞர் பாடுகிறார்.

> 'புருவமெனும் வில் வளைத்தாள் சீதை அந்தப் போதையிலே வில் ஒடித்தான் இராமன்'

கம்பன் காட்ட மறந்த இலக்கியச் சுவையை இந்த வரிகளில் நீங்கள் காணவில்லையா?

பழைய காலத்துப் பாடல் ஒன்று கருத்தை எவ்வளவு நளினமாகக் கையாளுகிறார்கள். என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஒரு தலைவி, இரவெல்லாம் தலைவனுக்காகக் காத்திருக்கிறாள். அவன் வரவில்லை அடுத்த தெருவிலிருந்து பாணன் பாடுகிறான்– தலைவி புரிந்து கொள்கிறாள். தலைவனை இந்தப் பாணன்தான் அந்தத் தெருவில் உள்ள பரத்தை ஒருத்தியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான் என்று தலைவிக்கு தலைவனைப் பார்க்கிலும் அந்தப் பாணன் மீதுதான் அதிக கோபம்–அவன் தன் முன் அடுத்த நாள் வரும்வரை காத்திருந்து அவனைச் சாடுகிறாள்.

"ஏ பாணா நீ என் தங்கையாகிய பரத்தை வீட்டிலிருந்து நேற்றிரவு பாடினாயே அதைக் கேட்டு என் தாயார் பேய் கூச்சலிடுகிறது என்றாள். வேறுபெண்களோ பேய் இப்படிக் கூச்சலிடாது இது நரியின் ஊளைச் சத்தம் என்றனர். என் நெருங்கிய தோழியோ இது பேயும் இல்லை, நரியும் இல்லை, நாய்தான் குரைக்கிறது என்றாள். உடனே நான் பேயின் கூச்சலும், நரியின் ஊளைச் சத்தமும், நாயின் குரைப்பு ஒலியும் சேர்ந்தது என்றால் அது நிச்சயம் உன் பாட்டாகத்தான் இருக்கும் என்றேன். நான் சொன்னது சரிதானே, நீ தான் பாடினாய் அல்லவா?" என்று பாணனைப் பார்த்துக் கேட்டு தன் கோபத்தைத் தணித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு இதுதான்.

'ஈட்டு புகழ் நந்தி பாணரே,
தங்கையர்தம் வீட்டிலிருந்து
பாட விடியளவும் கேட்டிருந்து
பேயென்றார் அன்னை, பிறர் நரி
என்றார், தோழி நாயென்றாள்,
நீ என்றேன் நான்'

என்ன அற்புதமான இலக்கிய வரிகள், நந்திக் கலம்பகம் என்ற சிற்றிலக்கியப் பாடல் இது.

கவிதை வரிகளை உதாரணமாகக் கூறினோம். சிறுகதைகளில் ஒவ்வொரு வரியுமே சிறந்த இலக்கியமாக மிளிர்வதும் உண்டு.

'ஒரு செல்வந்தக் குழந்தை ரொட்டியைப் பட்டருடன் தின்று கொண்டிருக்கிறது. அதை ஒரு பிச்சைக்காரக் குழந்தை பார்க்கிறது. அந்த ரொட்டியில் தனக்கு ஒரு சிறு துண்டு கிடைக்காதா என்று ஏக்கத்துடன் பார்க்கிறது. பணக்காரக் குழந்தையோ அதைக் கவனிக்காமல் சுவைத்து ரொட்டியை உண்கிறது. இதனைத்தான் சிறுகதை இலக்கியம் படைத்த ஒருவர் ஒரு வரியில் சொல்கிறார். ஏழைக் குழந்தை எப்படி அந்த ரொட்டித் துண்டைப் பார்க்கிறது என்று,

"ஏழைச் சிறுவன் தன் பார்வையாலேயே ரொட்டித் துண்டை எச்சில் படுத்தினான்"- கண்களால் எச்சில் படுத்த முடியுமா? முடியும் என்கிறார். கதாசிரியர்- என்ன அருமையான இலக்கியவாதி

இவ்வாறு பல உதாரணங்களைக் கூறலாம். நோக்கும் சுவையும் கொண்டதுதான் இலக்கியம். சுவை இல்லாத நோக்கு மட்டும் கொண்டது இலக்கியமாகாது. சுவை மட்டும் பெற்றதும் இலக்கியமன்று. தீமை நோக்கு இல்லாமல் சுவை தரும் நல்ல நோக்கு இருக்கும் எல்லாமே இலக்கியம்தான்- இத்தகை இலக்கியம் மேன்மேலும் வளர்க என வாழ்த்துவோம்!

சற்சொரூபவதி நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Agni Hotra - Charm by offerings to the Fire

Many have been the disasters earthlings had to face due to scientific misadventure. Of those we have known, ones that shook the very foundation of science are the Chernobyl nuclear plant disaster and the Bhopal calcium carbide leak and to a less extent the bursting of the chlorine plant in our metropolis.

Panic spread through the continent with the Chernobyl disaster, for men shuddered at the thought of radiation penetrating through earth and air to reach their houses and contaminating food stuffs and lodging in the very human system causing irreparable damage not only for one person but also for generations to come via genes. The guilty Russians tried to gauge the extent of the exposure to radiation. No one wanted a repetition of radiation effects that were unleashed after Nagasaki and Hiroshima. As the Russians kept scanning the areas, they found near the border, radiation was negligent and just a little away the instruments showed high count. Curious, the Russian Scientists probed into the matter and found to their amazement that the huts were dashed with cow-dung. The floor and walls of the hut were smeared with cow dung and the learned Scientists learned one more lesson – that cow dung has the property to neutralise the effects of the dreadful radiation. Way back in early eighties the leak of calcium carbide in Bhopal, India found a number of terrified and hysteric residents fleeing the area not knowing what the monstrous enemy was.

But saner residents immediately resorted to the charm by offerings to Agni or Fire, called Agni Hotra which is practised today as Homa therapy. These wise men overcame their enemy by their intellect and intelligence.

There was a disaster here in Colombo a few years before. A chlorine plant burst sending the gas on a wild spree. People were screaming wildly as they ran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

down the roads. People who opened their doors out of curiosity or may be with an intention to help found the unseen enemy burning their eyes to blindness or near to blindness. Unfortunately nobody was knowledgeable enough to chant the mantras called Agni Hotra by lighting a fire using ghee and dried cow-dung. Nor were there any cow-dung smeared walls and floors of huts in the path of the poisonous gas to arrest its onslaught. Well, we have seen this Homa Fire being lit at Hindu weddings. This Fire has the distinction of protecting not only the bridal couple but all those who are present at the wedding against any impurities or pollutants in the air. The Priests chant the mantras and feed the Fire with ghee and dried cow-dung and the smoke that fills the atmosphere drives away and nullify the ill effects of any dangerous pollutants in the air. Scientifically it can be said that when one performs Agni Hotra one acts as a biological transducer that is one can change a non-electrical signal (by putting pressure into it) into an electrical one. Here Fire is a special state of matter mentioned in ancient Vedic science as a form of bio-energy. In fact Agni Hotra Fire has fumigating effects too. This was tested to be true by microbiologists.

Today the atmoshpere is laden with all types of pollutants. These will reach the clouds and come down as poisoned water. Agni Hotra is a remedy for such atmospheric maladies. Crime is also as wide spread as these pollutants. Agni Hotra has the power to root out violence and uplifts the mind. There are many such beneficial effects of Agni Hotra. It should be performed at sunrise and sunset uttering the mantras. There are special mantras to be chanted tuned to the biorhythm of sun-rise and sun-set.

All that is needed to make this Fire is a copper pyramid, unbroken pieces of polished rice, ghee from cow milk and dried cow-dung. To prepare this fire: Take a few pieces of dry cow dung and keep one small flat piece at the bottom touching the pyramid. Arrange the other pieces on the four sides of the pyramid. Light the Fire by using camphor and apply ghee. Do not use kerosene or any other fuel.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chant the mantras as given.

At Sunrise - Sooryaya Swaha, Sooryaya Idam Namame (Add the first portion of the offerings to the Fire) chant, Prajapataye Swaha, Prajapataye Idam Namame. (Add the remaining portion of the offerings) At sun set - Agnaye Swaha, Agnaye Idam Namame (Add the first portion of offering) Prajapataye Swaha, Prajapataye Idam Namame (Add the remaining portions of offerings!

This has been accepted by Scientists world over as the best remedy and easiest recipe to maintain the cycle of Nature in an orderly fashion.

Mrs. Thilaka Vivekanandan Wijeratnam.

---

**Fun**

SMILE A DAY KEEP DEPRESSION AWAY

Marriage is a three ring circus: engagement ring, wedding ring, suffering.

A little boy asked his father, "Daddy, how much does it cost to get married?" His father replied, "I don't know, son, I'm still paying for it."

First Guy (proudly): "My wife's an angel!" Second Guy: "You're lucky, mine's still alive.

"Marriage is grand -- and divorce is about 20 grand.

A couple came upon a wishing well. The husband leaned over, made a wish and threw in a penny. The wife decided to make a wish, too. But she leaned over too much, fell into the well, and drowned. The husband was stunned, but then smiled, "It really works!"

" My grandfather said that there were two kinds of people; Those who did the work and those who took the credit. He said I should always try to be in the first group, Because there was much less competition."

Indira Gandhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்காக?

சர்வதேச மகளிர் தினமும் வந்து போய்விட்டது. மார்ச் மாதம் 8ம் திகதி பெண்களைப் பாதுகாப்போம் என்று பல பெண்ணியக்கங்கள் கோஷமிட்டன. அது வரவேற்கத்தக்கது. ஆனால் நமது பெண்களுக்கு இன்னும் மனத்துணிச்சல் வரவில்லை. ஏனோ தயங்குகிறார்கள். எதற்காக?

எமது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து தோன்றிய புகழ்பெரும் சமுதாயத்தின் தோன்றல்களான சில அபலைப் பெண்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்ட பின் கல்லாகவும், ஈரமற்ற மண்ணாகவுமுள்ள இச் சமுதாயத்தின் நிலை கெட்ட மாந்தரை நினைக்கும்போது மனம் எரிமலையாய் வெடித்துச் சிதறியது. இவ் வக்கினிக் குழம்பின் சில துளிகளை மட்டும் உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

ஒரு பெண் நாலு பிள்ளைகளுக்குத் தாய். பாராமுகமான கணவன். அவன் கொடுக்கும் பிச்சைக் காசில் குடும்பம் நடத்தி அவனுக்குக் கணக்கும் கொடுத்து அவனறியாமல் அயலவர்கள் பிள்ளைகளுக்குச் சட்டை தைத்துக் கொடுத்துப் பிள்ளைகளின் தேவைகளையும் நிறைவேற்றினாள். பிள்ளைகள் கூண்டை விட்டுப் பிரிந்து பல வருடங்களாகி விட்டன. அவள் கைப்பிடித்த கணவனின் சுயமைத்தன்மையைப் பற்றிச் சொல்லி அழுதாள். "இப்படிப்பட்ட மனிதனுடன் ஏன் சீவிக்க வேண்டும்?" என்று கேட்டதற்கு "என்ன செய்கிறது? சமுதாயம் பிறகு என்னைத் திட்டும்?" இந்தக் கல்தோன்றி மண்தோன்றா நிலையிலுருவாகிய சமுதாயம் இன்னும் அதே மனப்போக்குடன் இருக்கிறதே. எதற்காக? கடந்த முப்பத்தி இரண்டு வருடமாக இப்பெண் எப்படிப்பட்ட நரகத்திலிருக்கிறாள் என்று இந்தச் சமுதாயத்திற்குத் தெரியுமா? இப்படி பல பெண்களின் துன்பத்தைக் கண்டும் காணாதது போல இருக்கிறதே. எதற்காக?.

அவள் இன்னும் கன்னி கழியாதவள். நாற்பது வயதாகிறது. வீட்டிற்கு உழைத்துச் சோறு போடுகிறாள். அவள் தனிமரமாக இருப்பதைத்தான் தந்தை விரும்புகிறார். அவர் சீட்டாட்டப்பிரியர். உழைப்பில்லை. தாயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அப்பாவி. தன் மகளின் நிலைகண்டு மனத்தோடு புழுங்குகிறாள். கல்யாணப் பேச்சு வந்தாலும் அதில் குற்றங்குறை கண்டு கலைத்து விடுவான் அந்த சுயநலவாதி. இவ்விரு பெண்களும் மனந்துணிந்து ஒரு முடிவுக்கும் வராமல் தத்தளிக்கிறார்கள். எதற்காக?

அவள் கல்யாணமாகியும் விதவை. கேட்க ஆச்சரியமாய் இருக்கிறதா? பாடசாலையில் எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களிலும் முதலிடம் பெற்று தங்கப்பதக்கமும் பெற்றவள். "அவள் படித்து வேலை செய்து எமக்கு உழைத்துத்தர வேண்டாம்." நல்ல சீதனம் இருக்கு. ஒரு கொழு கொம்புதான் தேவை என்று நல்ல கொம்பன் மாட்டுக்குச் செய்து கொடுத்தார்கள். ஒரு கொம்பென்ன இரண்டு கொம்புகள் இருக்கே! அதே கொம்பால் அவளை முட்டித் தள்ளி அவள் பணத்தையும் தன் இஷ்டப்படி செலவு செய்து ஒரு பெண் குழந்தையுடன் வீட்டிற்கு அனுப்பிவிட்டான். அந்தப் பெண்ணிற்கு படிப்புமில்லை, பணமும் இல்லை, இன்று படிப்பு அவளுக்குக் கைகொடுக்குமல்லவா? பெற்றார் விறாப்புப் பேசினார்களே! எதற்காக?.

ஆனால் அவள் தன் மகளை உயர்படிப்புப் படிக்க வைக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறாள். நல்ல தீர்மானம். பெண்கள் நிச்சயம் உயர் கல்வி கற்க வேண்டும். அல்லது ஏதாவது கலையிற் தேர்ச்சி பெறவேண்டும்.

அன்றொரு தொலைக்காட்சி நாடகத்தில் ஒரு பெண் தன் கணவன் சாவதை விரும்பவில்லை. "நீங்கள் கண் மூடினால் எனக்குப் பூ வைக்க முடியாது, பொட்டு வைக்க முடியாது, மங்கல விஷயங்களுக்கு முன் செல்ல முடியாது" எப்படி இருக்கிறது இவளுடைய "லொஜிக்". நம் பெண்களுக்கே உரியது. அன்பில்லாக் கணவனுடன் வாழ்கிறார்கள். தான் தீர்க்க சுமங்கலியாயிருக்க வேண்டுமென்று திருவிளக்கேற்றுகிறார்கள். இப்படி ஒரு போலி வாழ்க்கை நடத்துகிறார்களே! எதற்காக?

சீவியம் முழுக்கச் சண்டை. வீட்டிலே அன்பும், ஆதரவும், இல்லா நிலை, குடிகாரக் கணவன், இரவு முழுக்க அடி, உதை, பகலில் எதுவுமே நடக்காதது போல அந்தப் பத்தினித் தங்கம் நெற்றியில் விபூதி குங்குமத்துடன் புன்னகை மாறா முகத்துடன் காட்சி தருவாள். எதற்காக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் நிலை ஜோன் லெனனும், போல் மக்கார்டினியும் எழுதிய 'எலினர் ரிக்பி' (Eleanor Rigby) என்னும் பாடலில் பின்வரும் ஒரு வரியை நினைவுக்குக் கொண்டு வருகிறது. "Wearing a face which she kceps in a jar by the door" முகம் அல்ல—இப்பெண்கள் வெளியே வரும் போது போடும் முகமூடி. எதற்காக?

பரஸ்பரம் வெறுப்பின் உச்ச கட்டத்துக்குப் போய்விட்டது அவர்கள் வாழ்க்கை. வெற்று வாழ்க்கை வாழ்கிறார்கள். இறந்தவுடன் ஊரறிய ஒப்பாரி எதற்காக?

எமது சமுதாயம் இருக்கிறதே ஒரு விசித்திரமான சமுதாயம். இந்த 21 ம் நூற்றாண்டிலும் பெண்ணின் வாழ்க்கையை ஒரு நூற்கண்டாய் நினைக்கிறது. இளம் பெண்களும், ஆண்களும் பார்ட்டி வைத்தால் அது நாகரிகம். திருமணமான பெண்களோ அன்றி கணவனை இழந்த பெண்களோ தம் ஆண் சகபாடியுடன் சிநேகித பாவத்துடன் பழகினாலும் தப்பு, கைகுலுக்கினாலும் தனக்குத்தான் கற்பு போச்சு என்று கதறும் எமது சீர் கெட்ட சமுதாயம்.

மகாத்மா காந்தி கற்பைப் பற்றி என்ன சொன்னார் பாருங்கள்— "ஒரு ஆண் ஒரு பெண்ணையோ, அன்றி ஒரு பெண் ஒரு ஆணையோ தொட நேர்ந்தால், ஒரு மரத்தைத் தீண்டும் உணர்வுதான் ஏற்பட்டால் அவரவர் கற்பிற்குப் பங்கமில்லை" இப் பொன் மொழியைக் குற்றம் பிடித்த கண் குருடானாலும் குற்றம் குற்றமே என்று குருட்டுப் போக்கில் சாதிக்கும் சமுதாயம் அறிந்து நடப்பது நல்லது.

கற்பென்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒன்றுதான்— சொற்றிறம்பாமை. அது ஒருவரின் பிரத்தியேகச் சொத்து. அவரவர் மனத்தூய்மை அவரவருக்கே தெரியும். பெண் மனக்கட்டுப் பாட்டால் தன் தூய்மையைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கை அவள் தந்தை, கணவன், சகோதரன், தனயன் ஆகிய யாவருக்கும் இருக்க வேண்டும். இவ்வாறு ஒரு பெண்ணை சமுதாயம் மதித்தாலே அவள் தன்னம்பிக்கையுடன் வாழலாம்.

கணவன் மனைவியிடம் அன்பு கலந்த மரியாதை வைக்க வேண்டும். இவ்வாறிருந்தாலே நம் சமுதாயத்தில் பெண்களின் அந்தஸ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரும். 'கூறாமற் சந்நியாசம் கொள்' என்பது தற்போதைய கால கட்டத்திற்கு ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் பொருந்தும்.

பெண்ணியம் பெருமையாய் இருக்க வேண்டுமெனில் வீட்டிலேயே அவளுக்கு ஒரு அந்தஸ்த்து இருக்க வேண்டும். இவ்வந்தஸ்த்து இல்லாத பட்சத்தில் ஒரு பெண் தன்னை வருத்தி மற்றையோரை வாழ வைக்கிறாள். எதற்காக? இவர்கள் குறைகளை நீக்க ஒரு Bureau, பெண்ணீய அலுவலகம் ஸ்தாபிக்க வேண்டும்.

எல்லா ஆண்களையும் சாடவில்லை. அன்பும், அறனும், பண்புமுள்ள குடும்பங்களனேகம் உண்டு. பரந்த மனத்துடன் பண்பாக நடத்தும் ஆண்கள் இறைவனாலே ஆசீர்வதிக்கப் படுவார்கள். இடும்பன், பிடாரி போன்ற பெண்களுமுண்டு. நான் மறுக்கவில்லை– அவர்களைச் சமாளிக்க முடியாமல் போனால் சந்நியாசம் கொள்ளலாம். சமுதாயம் அவனுடன் நிற்கும்– இதே நிலை பெண்ணிற்கு வந்தால் சமுதாயம் முகம் சுளிக்கும். எதற்காக? அது தான் என் வழக்கு.

"நானும் ஒரு பெண்"

---

# இறைவன் முன்னால் தேங்காய் உடைத்து வணங்குவதன் தத்துவ விளக்கம்

1.. தேங்காயின் புற ஓடு உடைப்பது – மாயையை அகற்றுவது

2. உள்ளே உள்ள வெண்ணிறப்பகுதி – இறைவன்

3. உள்ளே உள்ள இளநீர் – இறைவனின் அருள்சக்தியான பரமானந்த அமிர்தம்

## மொத்த விளக்கம்

மாயையை அகற்றி உயிர் இறையருளை நுகரச் செய்யும் செயலைக் காட்டுவதே தேங்காய் உடைப்பதன் உரிய தத்துவமாகும்.

(இந்து சமயக் களஞ்சியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. T.P. :330195
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org